23rd November 1963]

நகரப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் (ஊதியம்)

* 497 கேள்வி.—திரு. எஸ். முத்துலிங்கம் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபல் கமிஷனர்களின் சம்பளத்திற்குத் தகுந்தவாறு நகர பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்த அரசினருக்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், கிராம சேவக்குகளையே பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்போவதாக ஒரு பிரபோஸல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : உண்மைதான். அது பரிசீலனையில் இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட இரண்டு லட்சம், மூன்று லட்சம் அளவுக்கு வரி வசூல் செய்யக் கூடிய ஊராட்சி மன்றங்களுக்கு நிர்வாக அதிகாரிகளாக இருப்பவர்களுடைய சம்பளம் மிகக்குறைந்த அளவில் இருப்பதில்தான் லஞ்சப் புகார்கள் பிறக்க இடம் ஏற்படுகிறது. ஆகவே இருக்கக்கூடிய நிலைமையை ஒட்டி அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : லஞ்சம் என்பது சம்பளத்தைப் பொறுத்தது அல்ல. மக்களுடைய பண்பைப் பொறுத்தது. இப்போது இருக்கக்கூடிய முதல் கிரேட் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு 125—5—175 என்ற விகிதத்திலும், இரண்டாவது கிரேட் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு 90—4—110—3—140 என்ற விகிதத்திலும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. செலக்ஷன் கிரேட் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு 50 ரூபாய் ஸ்பெஷல் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

கடலூர் முனிசிபல் கவுன்சில்

* 498 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் முனிசிபல் அங்கத்தினர்கள் எத்தனை பேர் ராஜினாமா செய்திருக்கின்றனர் ?

(இ) அவர்கள் ராஜினாமா செய்ததற்குக் காரணம் என்ன ?

(உ) இப்போது நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) 1920-ம் வருடத்திய சென்னை ஆரம்பக்கல்வி சட்டத்தின் கீழ் வாடகை மதிப்பு நிர்ணயிக்கப்பட்ட எல்லாக் கட்டிடங்களுக்கும், நிலங்களுக்கும்,

[23rd November 1963

1—4—1963-ம் தேதியிலிருந்து கல்வி வரி 5 சதவிகிதம் விதிக்கப்பட வேண்டும் என்ற அரசாங்க ஆணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகத்தான் கடலூர் நகர மன்ற உறுப்பினர் இருபத்துமூவர் ராஜினமா செய்துள்ளனர்.

(உ) நகராட்சி மன்றம், அதன் தலைவர், நிர்வாக அதிகாரி ஆகியோரின் அதிகாரங்களைச் செயல்படுத்தவும், பொறுப்புக்களை நடத்தவும், அலுவல்களை நிறைவேற்றவும் கடலூர் நகராட்சி நிர்வாக அதிகாரியே விசேஷ அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

Guinea-worm disease (Singampunari Panchayat)

* 499 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have received any representation from the District Development Council of Ramanathapuram district regarding the eradication of the guinea-worm disease prevalent in Singampunari Panchayat Union; and

(b) if so, whether the Government have any scheme for the supply of protected water for that area ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ராட்டினக் கிணறுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் தான் இந்த வியாதி அதிகமாக இருப்பதாக அரசாங்கத்திற்கு ஏதேனும் தகவல் கிடைத்திருக்கிறதா? அரசாங்கம் இதில் தலையிட்டு அந்த வியாதிக்கு ஏதேனும் பாதுகாப்பு நடவடிக்கை செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த வியாதியை ஒழிக்க தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் 1.72 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையிலே குடி தண்ணீர் திட்டத்தை அரசாங்கம் ஏற்று செய்ய முடியாது. பஞ்சாயத்து கவுன்ஸில் பண்டு, லோகல் ஒர்க்ஸ் பண்டில் இருந்தும் தான் செலவு செய்ய வேண்டுமென்று அவர்கள் கொடுத்த ரெப்ரஸென்டேஷனுக்கு தகவல் கொடுத்திருக்கிறோம்.

திருச்சி அரசாங்க மருத்துவ மனை (குழந்தை மரணம்)

* 500 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி அரசாங்க மருத்துவ மனையில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் தேதியன்று ராசலெட்சுமி என்ற நான்கு வயதுப் பெண் குழந்தை இறந்துபோனது குறித்து ஏதேனும் புகார் வந்துள்ளதா?